# என் உள்ளம் கவி ஒன்று பாடும்

என் உள்ளம் கவி ஒன்று பாடும் - அது
என் தேவன் உனைத் தேடும்
தேனும் சுவையும் போல
தேடிய இன்பம் சேர
என் தேவன்  உனைப் பாடும் - 2

1
மாநிலத்தின் படைப்பினிலே உன்னை நான் அறிந்தேன்
மலர்களின் புன்னகையில் உன் எழில் நான் உணர்ந்தேன்
மழலைக் குழந்தை அழகினிலே மாந்தர் மனதின் அன்பினிலே
மன்னவா உனைக் கண்டேன் மாபெரும் மகிழ்வடைந்தேன்

2
நண்பர்களின் அன்பினிலே உன் சுவை நானுணர்ந்தேன்
பண்களின் இசையினிலே உன் சுவை நானுணர்ந்தேன்
பணிகள் ஆற்றும் கரங்களிலே பகிர்ந்திடும் அன்பரின் குணங்களிலே
பரமனே உனைக் கண்டேன் பக்தனாய் மாறி விட்டேன்